**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசித்திங்கள் 29 -ஆம் நாள்.

**I.A.No.278/2024**

**in**

**O.S.No.132/2019**

முத்துக்குமரன் .... மனுதாரர் / வாதி

// எதிர்//

செல்வகுமார் .... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், 1 முதல் 4 எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனு சாட்சி பட்டியல் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 3-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவார். மேற்படி வழக்கில் இன்று 07.08.2024 மனுதாரர் தரப்பு சாட்சிகளுக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்படும் மனுவில் கண்டுள்ள சாட்சிகள் மிக முக்கியமான சாட்சிகளாகும். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்வதற்கு வழக்குரையுடனோ, அதற்கு பிறகோ மனுதாரரால் சாட்சி பட்டியல் தாக்கல் செய்ய இயலாமல் போய் உள்ளது. மனுதாரர் தரப்பில் உரிய காலத்தில் சாட்சி பட்டியல் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தாக்கல் செய்யும் சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இதனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

ஆகவே மனுதாரர் தரப்பில் உரிய காலத்தில் சாட்சி பட்டியல் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிட கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) **எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

மனுதாரர்/வாதி மனுவில் கூறியுள்ள சங்கதிகள் ஏற்புடையதில்லை. மனுதாரர்/வாதி தாவா சொத்தினை சட்டமுரணாக அபகரிக்க வேண்டி உண்மைக்கு மாறான சங்கதிகளை கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி மனுதாரரை P.W.1 ஆக உண்மைக்கு மாறான ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

மனுதாரர் கூடுதல் சாட்சியாக மனுவில் கண்டுள்ள நபர்களை கொண்டு சமூகம் நீதிமன்றத்தில் தவறான விபரங்களை அளிக்க முயற்சித்து வருகிறார். மேற்படி சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி சமூகம் நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீண் அடித்து பிரதிவாதியை தேவையில்லாத அலைச்சலுக்கும்,

செலவினங்களுக்கும் உட்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல, மனு சட்டப்படி தவறானது. ஆகவே, மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**தீர்வு:-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதியின் முதல் விசாரணை முடிவடைந்து 1ம் வாதியினை குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவின் சாட்சி பட்டியலில் கண்டுள்ள நபர்களை விசாரிப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவை அனுமதிக்கக் கோரி, மனு தாக்கல் செய்துள்ள எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்துள்ள போதிலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும்

ஏற்படபோவதில்லை. மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் உள்ளது என்பதை கருத்திற் கொண்டு நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5) முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (15.10.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI
Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2024.10.17 10:55:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI
Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2024.10.17 10:55:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

-